**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்**

முன்னிலை **திரு. நா. தினகரன்,** நீதித்துறை நடுவர், அரூர்

2025–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24–ம் நாள் புதன்கிழமை

சி.எம்.பி.எண். 75/2025

அருணா (32/2025) க/பெ மாசேத் . . . புகார்தாரர்

/எதிராக/

ராணி (50/2025) க/பெ முருகன் . . . எதிரி

இம்மனு புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு **24.09.2025ம்** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் திரு. G. ராதாகிருஷ்ணன், M. Com., B.L., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இந்த வழக்கை புகார்தாரர் காசோலை தொகையை வசூல் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கை புகார்தாரர் கடந்த 05.12.2024ம் தேதியே தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் எதிரி காசோலை தொகையை திருப்பி செலுத்திவிடுவதாகவும், எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டதன் பேரில் புகார்தாரர் இந்த வழக்கினை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டதாகவும், அதனால் மேற்படி வழக்கை தாக்கல் செய்வதில் 55 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுவினை ஏற்று உத்தரவிட வேண்டி புகார்தாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரருக்கு கடந்த 17.03.2025ம் தேதி நோட்டீஸ் அனுப்பப்பட்டும் இதுவரை இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்ற காரணத்தினாலும், மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் இதுவரை எவ்விதமான எதிர்உரையும் தாக்கல் செய்யப்படவில்லை என்ற காரணத்தினாலும், இந்த மனுவை பரிசீலனை செய்து இந்த வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும், புகார்தாரருக்கு வாய்ப்பு

அளிக்கப்படவேண்டும் என்ற காரணத்தினாலும், நீதியின் நலன் கருதி புகார்தாரர் கோரும் பரிகாரம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக இந்த மனுவானது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் **(DLSA – Dharmapuri)** தருமபுரி மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்திற்கு ரூ.2500/– செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. இல்லையெனில் 27.10.2025ம் தேதியன்று ரத்து செய்யப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 24 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N DHINAKARAN
Digitally signed by N DHINAKARAN
Date: 2025.09.24 12:34:31 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அரூர்.**